# குறளப்பன்.



செருக்கொண்ட மாவலியின் செருக்கினையழிக்க,
மருதனை மான்தோல் போர்த்தி மறைத்து,
திருமார்பினில் புரிநூல், தாழங்குடையுடன்,
சிறுவுறு கொண்டு திருமாலும் வந்திட,
உருவது கண்டு மகிழ்ந்திட்ட மன்னனும்,
தருவதற்க்கு எதுவேண்டுமென வினவிட,
சிறுவடியால் மூவடி மண் மாலும் கேட்க,
தருவதற்கு மன்னனும் நீர் வார்க முன்வர,
வருதுயர் அறிந்த குலகுரு சுக்கிரனும்,
உருவது வண்டாகி கமண்டலத்துள் புகுந்து,
வருவழிதனை அடைத்துக் காத்திட நினைக்க,
கருநிற வண்ணனும் கைப்புல்லால் துளைக்க,
மறுவழியின்றி குருவும் விலகியேவோட,
சிறுவனுக்கு மன்னனும் நீர்வார்த்து கொடுக்க,
பெருவுருகொண்டு வளர்ந்திட்ட திருமாலும்,
இருவடியால் ஏழுலகும் அளந்த பின்னே,
ஒருவடி மீதமுள்ளதென அவனிடம் கூற,
திருமுடிதனை தாழ்த்தி மாவலி குனிந்திட,
திருவடியை அவன் தலைமீது வைத்து அழுத்தி,
திருமாலும் முடித்தான்மன்னனை உயிருடனே !

************************************************************************************